புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | ஆகஸ்டு 31, 2017 | புரட்சி 16 | முழக்கம் 33 | விலை: ரூ.3.00

## ஜாதி ஒழிப்பாளர்கள் ஓர் ஆயுதமாக்கிப் போராட என்னை, நான் ஒப்படைத்துவிட்டேன்

# உடுமலை கவுசல்யா போர் முழக்கம்

**ஜாதிய ஆதிக்கக் குடும்பத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட நான், அதிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டு ஜாதி ஒழிப்புப் போராளியாகி விட்டேன் என்றார், ஜாதி வெறிக்கு தன் துணைவரை பலி கொடுத்த உடுமலை கவுசல்யா.**

*ஆக.20ஆம் தேதி சிதம்பரத்தில்; விடுதலை கலை இலக்கியப்பேரவை நடத்திய 'திருமா-55' நிகழ்வில் பங்கேற்று அவர் நிகழ்த்திய உரை.*

நீங்கள் எனக்குத் தந்திருக்கும் இந்தத் தலைப்பு என் வயதிற்கும், அனுபவத்திற்கும் பொருத்த மில்லாதது; சுமக்கமுடியாத கனம் பொருந்தியது.

திருமாவளவன் என்கிற ஒரு அரசியல் ஆளுமை குறித்து சிறியவளான நான் பேசுவதற்கு இனிமேல் தான் என்னை நான் வளர்த்துக்கொள்ள வேண்டும். ஆனாலும், நான் இந்த நிகழ்விற்கு வந்தமைக்குக் காரணம் நான் உங்களில் ஒருத்தி, உங்கள் குடும்பத்தில் ஒருத்தி என்பதைப் பறைசாற்றுவதற்குத்தான்.

என் குடும்பம், என் பெற்றோர் முத்துராமலிங்கத் தேவரின் வம்சம் எனச் சொல்லிக் கொள்பவர்கள். அவர் குறித்து பெரிதாக எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், அந்த உருவம் சாதிவெறியைத் தூக்கிப் பிடிக்கிறவர்களின் அடையாளமாகவும், குறியீடாக வும் நடைமுறையில் திகழ்கிறது என்பதை நான் தினம்தினம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். இதற்குமாறாக தந்தை பெரியாரும், அண்ணல் அம்பேத்கரும் சாதி ஒழிப்பின் குறியீடாகவும், அடையாளமாகவும் திகழ்கிறார்கள்.

இவர்களை உயர்த்திப் பிடிப்பதின் மூலம் நான் இந்த உலகத்திற்குச் சொல்ல விரும்புவது சாதிவெறி ஆதிக்கம் நிறைந்த ஒரு கூட்டத்திலிருந்து என்னைப் பெயர்த்தெடுத்து, சுயமான சாதி ஒழிப்புப் போராளியாக, இந்த மண்ணில் வேர்விட்டு நிலைத்து நிற்பேன் என்பதை இந்தத் தமிழ்ச் சமூகத்திற்கு அறியப்படுத்துகிறேன்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் முழக்கம் "சாதி ஒழிப்பே, மக்கள் விடுதலை" என்பதை நான் பல இடங்களில் பார்த்திருக்கிறேன். ஒரு கட்சியாக (அ) இயக்கமாக நான் என்னை அடையாளப்படுத்திக் கொள்வதை விரும்பவில்லை.

சங்கரின் நினைவைக் கொண்டு தோழர் கவுசல்யா என்ற ஒரே ஒரு அடையாளத்தோடு கவுரவக் கொலைகளுக்கு எதிராகவும், சாதி ஒழிப்பிற்காகவும், பெண் விடுதலைக்காகவும், வாழ்நாள் முழுவதும் என்னளவில் பங்களிக்கவே விரும்புகிறேன். அதே நேரத்தில் "சாதி ஒழிப்பே, மக்கள் விடுதலை" என்ற முழக்கத்தோடு என்னை முழுவதுமாக ஐக்கியப் படுத்திக் கொள்கிறேன். இந்த அடிப்படையிலிருந்து சொல்கிறேன் 'நான் உங்களில் ஒருத்தி.'

சாதியின் பெயரால் என் சங்கரை இழந்து நானும் உயிர்தப்பி உங்கள் முன் நிற்கிறேன். இப்படி நான் நிற்பதற்கான தகுதி, அப்படி ஒரு நிகழ்வு என் வாழ்வில் நடந்துவிட்டது என்பதால் மட்டும் கிடைத்ததல்ல. அதுமட்டுமே என்னை இப்படி யொரு மேடையில் நிறுத்துவதற்குப் போது மானதல்ல என்பதை நீங்களும் அறிவீர்கள், நானும் அறிவேன். எந்தச் சாதி அன்பே உருவான சங்கரைப் பலியெடுத்ததோ அந்தச் சாதியைப் பலியிடுவதற்கு என் வாழ்நாள் முழுவதும் பங்களிப்பேன் என உறுதி எடுத்துக் கொண் டிருக்கிறேன்.

சாதி ஒழிப்பிற்கு உழைப்பவர்கள், போராடு பவர்கள் என்னை ஒரு ஆயுதமாக எடுத்து போர்செய்ய காலம் முழுவதும் ஒப்புக் கொடுத்துவிட்டேன் என்பதன் அடையாளமாகவும், அறிவிப்புச் செய்யவும், இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக் கொள்கிறேன். இதுதான் நான் இங்கே நிற்பதற்கான தகுதியை வழங்கியிருக்கிறது. இந்த வகையில், இந்த



அவையில் ஓங்கி அறிவிக்கிறேன் 'நான் ஒரு சாதி ஒழிப்புப் போராளி.'

நான் ஒரு அடுப்பங்கரைப் பெண்ணாக, குழந்தை பெற்றுத்தரும் கருவியாக, அலங்காரத்திற்குரிய போகப் பொருளாக வாழ்ந்து கொண்டே சாதி ஒழிப்பிற்காக பங்களிக்க முடியுமா? என்கிற கேள்வியை உங்கள்முன் எழுப்ப விரும்புகிறேன். ஒரு ஆணை மணந்து, அவன் கருத்தை என் கருத்தாக்கி, நான் வேலைக்குப் போனாலும் அவனுக்கும் சமைத்தளித்து, அவன் அனுமதியின்றி எனக்கான எதையும் செய்துகொள்ள இயலாது, ஆனால் அவன் பயணத்திற்குத் தேவையானவற்றை தயார் செய்து கொடுத்து, அவனுக்கு உடப்பட்டு, கட்டுப்பட்டு வாழ்கிற வாழ்வைத்தான் இந்தச் சமூகம் ஒரு பெண்ணிடம் வலியுறுத்துகிறது. இப்படி வாழ்ந்து கொண்டே சாதிக்கு எதிராக பங்களிக்க முடியுமா? என்பது எப்போதும் என்னுள் ஓடிக்கொண்டே இருக்கிறது.

முதலில் இப்படியொரு குடும்ப அமைப்பிற்குள் பெண்ணுக்கு மட்டும் கற்பிக்கும் ஒழுக்கத்தில் அவள் தவறாமல் இருப்பது என்றால் அதற்கு என்ன பொருள்?

என் குடும்பத்தில் என் தாய் இப்படித் தான் 'கணவன் வாழ்வை' வாழ்ந்தார். நானும் அப்படித்தான் வாழவேண்டும் என்பதை வாழ்ந்துகாட்டியதன் மூலம் எனக்கு அறிவுறுத்தினார்கள்.

அதற்கான காரணத்தை இப்போது யோசித்துப் பார்க்கிறேன். அப்படி வளர்ந்தால்தான் அந்தப் பெண் தன் கருத்தென எதையும் வெளிப்படுத்தமாட்டாள். தன் உரிமைக்கு ஓங்கிக் குரல் கொடுக்கமாட்டாள். இறுதியிலும் இறுதியாக தன் உரிமையை மதிக்கிற தன் சுதந்திரத்தை இயல்பாய் ஏற்கிற தனக்கான காதலை தேர்ந்தெடுக்க மாட்டாள். ஒன்றை அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன்: காதலில் மட்டும்தான் ஆதிக்கம் இருக்காது; அடிமைத்தனம் இருக்காது. காதலிக்கிறவனும் ஆண்தான். ஆனால் அவன் காதலிக்கும் அந்தப் பெண்ணின் மீதான பேரன்பு அவளின் உணர்வை, கருத்தை மதிக்கச் செய்யும். அவனுள் அவனை அறியாமல் இருக்கிற ஆணாதிக்கத்தைக் காதல் உதறியெறிய நிச்சயம் பழக்கும்.

பெரியார் சொல்கிறார் : "மலம் அள்ளுபவருக்கு மலத்தின் நாற்றம் பழகிப் போய்விடுவது மாதிரி பெண் தன் மீது சுமத்தப்பட்டுள்ள அடிமைத்தனைக்கு பழகிப் போயிருக்கிறாள்." தன் கருத்தை தன் காதலை தனக்குள்ளேயே வைத்து மருவி, கொன்று வாழும் பெண்ணைக் கொண்டுதான் ஒரு குடும்பம் தங்கள் சாதிக் கவுரத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். நீங்கள் எல்லோரும் அண்ணன் திருமாவை நேசிக்கிறீர்கள். நீங்கள் எல்லோரும் சாதி ஒழிப்புப் போராளிகள். உங்கள் மனைவிக்கு அவர் கருத்தைத் தடையின்றி செயல்படுத்தும் பரந்த வெளியை இதுவரை தந்துள்ளீர்களா? என்கிற கேள்வியை

(4ஆம் பக்கம்)

## பெரியார் வார்க்க விரும்பிய விடுதலைப் பெண்

இன்று பெண்கள் விரும்பி உடுத்தும் உடையில் மார்பகங்கள் எடுப்பாய்த் தெரிகிறதே எனப் பார்க்காதீர்கள். அந்த உடை அவளின் உரிமை எனப் பாருங்கள். பிறகு உங்களுக்கு மார்புகள் தெரியாது, அவளின் ஆளுமை மட்டுமே தெரியும்.

நீண்ட முடிவிட்டு, சடைபின்னி, பூ வைத்திருந்தால் ரசிக்கும் அழகுடன் பெண் திகழ்வாளே எனப் பார்க்காதீர்கள். அழகைப் புறந்தள்ளி தனக்கான ஆற்றலை வளர்த்துக் கொண்டு நிமிர்ந்து நிற்கிற கம்பீரத்தைப் பாருங்கள்.

பெண்ணுக்கென்று காதலனைத் தாண்டி, கணவனைத் தாண்டி ஆண் நண்பன் ஒருவனோடு அவரவர் காதல் பகிர்கிற, காமம் விவாதிக்கிற, தோள் அணைத்து நடக்கிற, ஒரே படுக்கையில் கால் மேல் கால் போட்டு ஆழ்ந்து உறக்கம் கொள்கிற உறவு இருக்க முடியும் என்பதை முதலில் நம்புங்கள். சமூகத்தின் அழுக்குகளை இந்தத் தூய உறவுக்குள் நுழைக்காதீர்கள். அதை மதித்து இயல்பாக ஏற்கிற சமூகத்தைப் படைக்க முதலில் நாம் முன் வருவோம்.

இப்படியெல்லாம் பார்க்கப் பழகிவிட்டால் அப்படி நிமிர்ந்து வாழும் பெண் ஒழுக்கங் கெட்டவளாய்த் தெரியமாட்டாள். தந்தை பெரியார் வார்க்க விரும்பிய விடுதலைப் பெண்ணாகத் தெரிவாள்.

இப்படி உருவாகிற பெண்ணைக் கொண்டு சாதி தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவே முடியாது. அதனால்தான் பெண்ணுக்கு அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற அயோக்கியத்தனத்தைக் கற்பிக்கிறார்கள். சாதியில் எப்போதும் ஆதிக்க நிலையிலும் அதைக் காக்கும் இடத்திலும் இருக்கும் பார்ப்பனச் சமூகத்துப் பெண்களும் அடிமைகளாகவே இருக்கிறார்கள். பெண் எல்லா சமூகத்திலும் அடிமையாகவே இருக்கிறாள். சாதி ஒழிப்பிற்கும் ஒட்டு மொத்தப் பெண் விடுதலைக்கும் ஒரு சேர உழைப்பதுதான் சமூக விடுதலைக்கு நம்மை இட்டுச் செல்லும் என நம்புகிறேன்.

ஒரு விடுதலைப் பெண் தன்னை விடுதலை செய்து கொள்வது மட்டுமில்லாமல் சாதிய அமைப்பின் அச்சாணியை உடைத்து எறிவதன் மூலம் ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்தின் விடுதலையாகவும் மாறுகிறாள்.

*சாதி ஒழிப்பே மக்கள் விடுதலை!* *பெண் விடுதலையே சாதி ஒழிப்பு!*

**– உடுமலை கவுசல்யா உரையிலிருந்து**

தலையங்கம்

## சமூக நீதி தலைநகரம் வீழ்ந்துகிடக்கிறது

தமிழ்நாட்டின் தனித்துவமான சமூகநீதி தத்துவத்துக்கு சாவுமணி அடித்துவிட்டது நடுவண் பா.ஜ.க. ஆட்சி. ஓராண்டுக்கு தமிழ்நாட்டுக்கு விதிவிலக்கு தருவதாகக் கூறி முன் வந்து, தமிழக அரசிடம் அவசரச் சட்டத்தை தயாரிக்கச் சொல்லி விட்டு, உச்சநீதிமன்றத்தில் ஒரு மாநிலத்துக்கு மட்டும் விதி விலக்கு தர முடியாது என்று கூறும் துணிச்சல் மோடியின் பா.ஜ.க. ஆட்சிக்கு எப்படி வந்தது? தமிழர்கள் அவ்வளவு ஏமாளிகள் என்று கருதி விட்டார்கள்.

மாநில அரசு பாடத் திட்டத்தில் படித்த 85 சதவீத மாணவர்களில் மருத்துவப் படிப்புக்கு தேர்வு பெற்றவர்கள் 2224 பேர். 15 சதவீதம் பேர் மட்டுமே படித்த சி.பி.எஸ்.ஈ. பாடத் திட்டத்தில் தேர்வு பெற்றிருப்பவர்கள் 1310 பேர். நீட் தேர்வு நடத்தாமல் கடந்த ஆண்டு மருத்துவப் படிப்புக்கு தேர்வு பெற்ற சி.பி.எஸ்.ஈ. பாடத் திட்டத்தில் படித்த மாணவர்கள் எண்ணிக்கை 30 மட்டும்தான். சுமார் 45 சதவீதம் இப்போது அதிகரித்திருக்கிறது. இந்த அநீதியை முறைப்படுத்துவதற்கு மாநில அரசு பிறப்பித்த 85 சதவீத இடங்களை மாநில பாடத் திட்டத்தில் படித்தவர்களுக்கே தரவேண்டும் என்ற அரசாணையையும் நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்துவிட்டன. தரவரிசைப் பட்டியலில் முதல் 20 இடங்களில் 15 இடங்கள் சி.பி.எஸ்.ஈ. பாடத் திட்டப் பிரிவினருக்குப் போய் விட்டது.

இப்போது ஒவ்வொரு நாளும் அதிர்ச்சி தரும் தகவல்கள் வருகின்றன. தமிழகத்தைச் சாராத பிற மாநிலத்தவர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்தவர்கள் என்ற (Nativity) பொய்யான சான்றிதழ்களைத் தந்து தமிழ்நாடு மருத்துவக் கல்லூரிகளில் இடம் பிடித்திருக்கிறார்கள். கேரளா, ஆந்திரா, புதுவை மாநிலங்களைச் சார்ந்த 300 மாணவர்கள் வரை போலி வாழ்விட சான்றிதழ் தந்து இடங்களைப் பிடித்திருக்கிறார்கள் என்று மாநகர காவல்துறை ஆணையருக்கு புகார் வந்துள்ளது. இதுவரை 10 போலி சான்றிதழ்களை அடையாளம் கண்டு உள்ளதாகவும் இது குறித்து சான்றிதழ் வழங்கும் வருவாய்த் துறை அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு விசாரித்து வருவதாகவும் கலந்தாய்வை நடத்தும் தமிழக அரசு அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். தர வரிசைப் பட்டியலில் முதலிடம் பெற்றதாக அறிவிக்கப்பட்ட மாணவரே தனது வாழ்விடச் சான்று, ஜாதிச் சான்று என்ற இரண்டிலுமே மோசடி செய்திருக்கிறார் என்று புகார்கள் வந்திருப்பது அதிர்ச்சி தருகிறது.

தமிழ்நாட்டில் வேறு மாநிலத்துக்காரர்கள் 5 ஆண்டுகளுக்கு கூடுதலாக தங்கியிருந்ததாக சான்றிதழ் தந்தால் தமிழ்நாட்டுக்காரர்களாக ஏற்றுக் கொள்ளப்படுவவார்கள் என்ற விதி முறையை மோசடிக்குப் பயன்படுத்தியிருக் கிறார்கள்.

இவை மட்டுமா?

இந்தியாவிலேயே மருத்துவ உயர் சிறப்புப் படிப்புக்கான இடங்கள் தமிழ்நாட்டில்தான் அதிகம். 192 இடங்கள் உள்ளன. பல மாநிலங்களில் இந்த எண்ணிக்கை ஒற்றைப் படை வரிசையில்தான் உள்ளது. இந்த இடங்களை அகில இந்திய அளவிலேயே நிரப்பப்பட வேண்டும் என்று கடந்த ஆண்டு முதல் பா.ஜ.க. ஆட்சி பகிரங்கப் போட்டிக்கு உட்படுத்தியதால் வடநாட்டுக்காரர்கள் தமிழகத்தின் இடங்களைப் பிடித்துவிட்டார்கள். உதாரணமாக சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் குழந்தை களுக்கான உயர் சிறப்புப் படிப்பில் (DM - Neonatology) 8 இடங்களில் 6 இடங்களையும், கல்லீரல் மருத்துவத்துக்கான (Hepatology) இரண்டு இடங்களையும் மூட்டுவாத சிகிச்சைக்கான (Rheumatology) நான்கு இடங்களில் இரண்டு இடங்களையும், இரைப்பை குடல் நோய் மருத்துவத்துக்கான (Medical Gastro Enterology) 14 இடங்களில் 12 இடங்களையும் வேறு மாநிலத்தவர்கள் அபகரித்துக் கொண்டு விட்டார்கள்.

இது தவிர நீட் தேர்வை எழுதுவதற்கு வெளி நாடுகளில் வாழும் இந்தியர்கள் எழுதலாமாம். அது மட்டுமல்ல வெளிநாட்டுக் குடி மக்களே நீட் எழுத கதவு திறந்து விடப்பட்டிருக்கிறது. மருத்துவப் படிப்பு மட்டுமின்றி தமிழகத்தின் மருத்துவ சேவையையும் சீர்குலைத்துவிட்டார்கள்.

இந்தியாவின் தலைநகரம் டெல்லியாக இருக்கலாம்; ஆனால் சமூகநீதியின் தலைநகர் தமிழ்நாடு என்று பெருமையுடன் கூறினார் முன்னாள் பிரதமர் மாமனிதர் வி.பி.சிங். அந்தத் தலைநகரம் டெல்லி பார்ப்பனிய படையெடுப்பால் தகர்ந்து போய் நிற்கிறது.

நாம் என்ன செய்யப் போகிறோம்?

# பூணூல் ரோபோக்கள்

ஜப்பானில் டோக்கியோ நகரில் ‘இடுகாடு - இடுகாட்டில் நடக்கும் இறுதிச் சடங்குகள்’ குறித்து சர்வதேச கண்காட்சி நடந்திருக்கிறது. அப்படி ஒரு கண் காட்சி ஆண்டுதோறும் ஒவ்வொரு நாட்டில் நடக்கிறது. இந்த முறை நடந்தது டோக்கியோ நகரில். கண்காட்சியில் பங்கேற்கும் பார்வையாளர் களுக்கு இறுதிச் சடங்கு குறித்த தொழில்முறை பயிற்சிகள் தரப்படுகிறது.

இதில் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது புத்தமதச் சடங்கு முறையில் ஜப்பானில் நடக்கும் இறந்தவர்களுக்கான சடங்குகளை ஒரு ‘ரோபோ’ எந்திரம் செய்து காட்டியதுதான். ஜப்பானில் இளைஞர்களைவிட முதியோர் எண்ணிக்கை அதிகம். எனவே இறுதிச் சடங்குகள் நடத்த ‘‘அதில் பயிற்சிப் பெற்றவர்கள் எளிதில் கிடைப்பதில்லை என்பதால் அந்நாட்டின் ‘சாப்ட் பேங்க்’ எனும் நிறுவனம், ‘பெப்பர் ரோபோட்’ என்ற இந்த மனித எந்திரத்தை உருவாக்கியிருக்கிறதாம்.

நமது நாட்டில் கோயிலில் ‘அர்ச்சனை’, ‘கும்பாபிஷேகம்’, வீட்டில் ‘விவாக சுபமுகூர்த்தம்’, ‘கிரகப் பிரவேசங்களை’ நடத்த பிறப்பால் ‘பிராமணன்’ என்ற பிறப்புச் சான்றிதழ் கொண்ட ‘பூணூல் ரோபோக்கள்’ மட்டுமே செய்ய முடியும். ‘ஆகம வழிபாட்டு முறைகளை மீறப்படாது; அது கடவுளுக்கே எதிரானது’ என்று இந்த ‘பூணூல் ரோபோக்கள்’ உச்சநீதிமன்றம் வரை போய் வழக்காடி வெற்றி பெற்று விட்டன. ‘ஆகமம்’ ஏதோ அய்.நா.வின்மனித உரிமை சாசனம் என்பது போல் பம்மாத்து காட்டுகிறார்கள். தன்மானச் சிங்கங்களாக மார்தட்டும் ஏராளமான ‘தமிழர்களும்’, ‘பூணூல் ரோபோக்’களிடமே மானமிழந்து சரணடைந்து கிடக்கிறார்கள்.

கிராமத்தில் ஒருவர் இறக்கிறார் என்றால், ஒவ்வொரு வேலைக்கும் இங்கே தனித் தனி ஜாதி; பறை அடிக்க சங்கு ஊத ஒரு ஜாதி; பாடை கட்ட - வீதிகளில் பிணம் போகும் பாதைக்குப் பூப்போட; பிணத்தை எரிக்க அல்லது புதைக் குழித் தோண்ட, இறந்தவர்களின் வாரிசுகளுக்கு மொட்டை அடிக்க, அல்லது மீசை எடுக்க என்று ஒவ்வொரு வேலைக்கும் தனித் தனி ஜாதி இங்கே தேவைப்படுகிறது.

‘‘பூலோகத்தில்’’ மக்கள் சேவைக்காக அவதரித்ததாகக் கூறிக் கொள்ளும் ‘பூதேவர்’களான ‘பூணூல் ரோபோக்கள்’கூட தங்கள் வீட்டுப் பிணங்களைத் தூக்குவதற்கு ‘சவுண்டிப் பிராமணன்’ என்ற ஒரு பிரிவை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் புத்த மதச் சடங்குகளை நடத்த புத்த மத குரு வேண்டாம். ‘ரோபோக்களே’ போதும் என்று ஜப்பான் நாட்டுக்காரர்கள் செயல்படத் தொடங்கியிருப்பதைப் பார்த்து கைத்தட்டி மகிழ்ச்சிக் கூத்தாடத் தோன்றுகிறது.

அதேபோன்ற ரோபோக்கள் இங்கேயும் வந்துவிட்டால் ஜாதி அவலங்களும், பாகுபாடுகளும் ஒழிந்து போய் விடுமே; அப்படி ஒரு மாற்றம் இந்த நாட்டுக்கு வந்து சேராதா என்று ஏங்குகிறோம்.

ஆனாலும்...

அப்படியே ரோபோக்கள் வந்தாலும் அவைகளுக்கு ‘பிராமணர்களின்’ அங்கீகாரமும் அதற்கான ‘தட்சணை’யும் கட்டாயம். அப்படி ‘பிராமண’ அங்கீகாரம் பெற்ற ‘ரோபோக்களுக்கு தான்’ சடங்கு செய்யும் உரிமையே உண்டு என்று நமது ‘பூதேவர்கள்’ நீதிமன்றத்துக்குப் போய் விடுவார்களே! உச்சநீதிமன்றமும் அதுதான் சரி என்று தீர்ப்பு வழங்கினாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு இல்லையே!

எத்தனை அறிவியல் புரட்சி வந்தாலும் அது ‘ஆகமத்துக்கு’ கட்டுப்பட்டது என்பதே இந்த நாட்டின் பேரவலம்!

டோக்கியோ சாப்ட்வேர் நிறுவனங்களே! இந்த பூணூல் ரோபோக்களை முடிவுக்குக் கொண்டு வர ஏதேனும் ‘அறிவியலை’ கண்டுபிடியுங்களய்யா!

**– கோடங்குடி மாரிமுத்து**

# காவல்துறைக்கு என்ன தண்டனை?

மதுரை மாநகர காவல்துறை மகேஷ்குமார் அகர்வால், ‘‘சாதி மறுப்புத் திருமணத்தால் பாதிக்கப்பட்ட நபர்களிடமிருந்து புகாரைப் பெறுவதற்கு ஆணையர் அலுவலக வளாகத்தில் குற்றத்தடுப்பு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அப்படி வரும் புகாரை விசாரிக்க தனி ஆய்வாளர் நியமிக்கப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்டவர்கள் தங்களது புகாரைத் தெரிவிக்கவும் தகவல்களைப் பெறவும் 0452 2346302 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்,’’ என்று அறிவித்திருக்கிறார். இந்தத் தனிப்பிரிவு குறித்து ஆணவக் கொலைக்கு எதிராகப் போராடி வரும் கவுசல்யாவிடம் கேட்டபோது:

‘‘இந்தப் புதுபிரிவினால் ஆணவக் கொலை குறைந்துவிடுமா என்ன? நாங்கள் கேட்பது பாதுகாப்பு. அவர்களால் அந்தப் பாதுகாப்பை கொடுத்துவிட முடியுமா? பாதுகாப்பு கேட்டு போலீஸ் நிலையத்தில் தஞ்சம் அடையும் பெண்ணிடம் பெற்றோருடன் சென்றுவிடும்படி கவுன்சலிங் செய்யப்படுகிறது அல்லது அவளிடம் கறக்க வேண்டிய விஷயங்களைக் கறந்து நல்லவர்களாக நடிக்கும் போலீசார், அந்தப் பெண்ணின் பெற்றோர் வந்ததும் அவர்களுக்குச் சாதகமாக செயல்படுகிறார்கள். சாதிமறுப்புத் திருமணம் செய்றவங்களைக் காட்டிக்கொடுக்கிற போலீஸுக்கு என்ன தண்டனை?

என்னைப் பொறுத்தவரை, இந்தத் தனிப்பிரிவு என்பது புகார் சொல்வதற்கான ஒரு தொலைபேசி எண் மட்டுமே. இதன்மூலம் சாதி மறுப்புத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதி காப்பாற்றப்பட்டால் மட்டுமே இந்தப் பிரிவின் செயல்பாடுகள் மக்களால் வரவேற்கப்படும். இல்லையென்றால் இதுவும் ஒரு தொலைபேசி எண் என்கிற அளவில் கடந்துபோகப்படும்.

வரதட்சணைக் கொடுமைக்கு எதிரான சட்டம், பாலியல் வன்கொடுமைக்கு எதிரான சட்டம் போன்று ஆணவக்கொலைக்கு எதிரான சட்டம் இயற்றப்பட வேண்டும். சட்டம் இருந்தால்தான் பாதிக்கப்பட்டவர் களுக்கு ஆதரவு அளிப்பது, பாதுகாப்பு அளிப்பது மற்றும் குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பது போன்றவை எல்லாம் சாத்தியப்படும்’’ என்கிறார் கௌசல்யா.

**விகடன் மாணவ பத்திரிக்கையாளர்களிடம் கூறியது.**

# ‘நட்புத் திருவிழா’வாக நடந்த பாமரன் இல்ல மண விழா

சீரிய பெரியாரியலாளரும் எழுத்தாளருமான பாமரன் - யாழ்மொழி ஆகியோரின் மகன் சேகுவேரா-கனிமொழி ஜாதி மறுப்பு இணை ஏற்பு விழா, ‘பீடை மாதம்’ என்று மூடநம்பிக்கையாளர்களால் கருதப்படும் ஆடி 28ஆம் தேதி (ஆகஸ்ட் 13) மாலை கோவை பி.எம்.என். திருமண மண்டபத்தில் ‘நண்பர்கள் கூடும் திருவிழா’வாக சிறப்புடன் நடந்தது. நிமிர்வு கலையகத்தின் பறை இசை யுடன் நிகழ்வுகள் தொடங்கின. கலைஞர்களுக்கு கவிஞர் அறிவுமதி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நினைவு பரிசுகளை வழங்கினர்.



ஈழப் போராளி பாலகுமார் துணைவியார், பாமரனின் வயது முதிர்ந்த தாயார் முன்னிலையில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மணமக்களுக்கு சுயமரியாதை திருமணத்துக்குரிய உறுதி மொழிகளைக் கூற, மணமக்கள் உறுதியேற்று மாலை மாற்றிக் கொண்டனர். பெரியாரியலாளரும் ஆய்வாளருமான தொ. பரமசிவம், நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க தலைவர் தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட பல்வேறு இயக்கங்கள் கலை, இலக்கிய, திரை உலக நண்பர்கள், அறிஞர்கள், ஊடகவியலாளர்கள் என இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் மணவிழாவுக்கு திரண்டு வந்திருந்தனர். ‘ஜாதி கடந்த நட்புகளின் திருவிழா’வாக மணவிழா நடந்தது.

# சென்னை பரப்புரைக் குழுவின் பயண எழுச்சி

*சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் பங்கேற்ற சமூக நீதி - சமத்துவப் பரப்புரைப் பயணம் குறித்த செய்தித் தொகுப்பு.*

7.8.2017 அன்று காலை 10 மணியளவில் தாம்பரம் அம்பேத்கர் சிலை அருகில் பரப்புரை நடைபெற்றது. இதில் இந்திய தேசிய முஸ்லிம் லீக் மாவட்டத் தலைவர் (காஞ்சிபுரம்) அக்பர் அலி தலைமையில் பரப்புரைக் குழுவினருக்கு வரவேற்பு அளித்து ஜாகீர் உசேன் உரை நிகழ்த்தினார். பின் இரா. உமாபதி, விரட்டுக் கலைக் குழு ஆனந்த், விழுப்புரம் அய்யனார் ஆகியோருக்கு சால்வை அணிவித்தனர். மதி.மு.கவை சார்ந்த தாம்பரம் மணி வண்ணன் நிகழ்ச்சியில் பங்கேற்று ரூ.2000 நன்கொடை அளித்தார். பிறகு 12 மணியளவில் கூடுவாஞ்சேரி பேருந்து நிலையம் அருகில் பரப்புரை நடைபெற்றது. பொத்தேரியில் தெள்ளமிழ்து, தினேஷ் ஆகியோர் தலைமையில் பரப்புரைக் குழுவினருக்கு பறை முழக்கத்துடன் வரவேற்பு அளித்தும், மதிய உணவுக்கும் ஏற்பாடு செய்தனர். கூடுவாஞ்சேரி ராஜேஷ் ரூ.500 நன்கொடை அளித்தார்.

மாலை 4 மணியளவில் சிங்கபெருமாள் கோயில் பேருந்து நிறுத்தம் அருகிலும், மாலை 5.30 மணியளவில் செங்கல்பட்டு பழைய பேருந்து நிலையம், காமராசர் சிலை அருகிலும் பரப்புரை நடைபெற்றது. காஞ்சி இரவி பாரதி உரை நிகழ்த்தினார். இரவு தங்குவதற்கும் இரவு உணவு, காலை உணவு ஆகியவற்றுக்கும் கல்பாக்கம் முருகேசன், திராவிடர் கழக மறைமலை நகர் நகரத் தலைவர் துரைமுத்து ஏற்பாடு செய்தனர்.

**திண்டிவனம்**

8.8.2017 அன்று காலையில் துரைமுத்து தனது இல்லத்தில் தோழர்களுக்கு தேநீர் அளித்து பரப்புரை வெற்றி பெற வாழ்த்து தெரிவித்து பயண ஒருங்கிணைப்பாளர் விழுப்புரம் அய்யனாருக்கு சால்வை அணிவித்தார். காலை 10 மணியளவில் மதுராந்தகம் பேருந்து நிலையம் அருகிலும், 12 மணியளவில் சித்தாமூர் பேருந்து நிறுத்தம் அருகிலும் பரப்புரை நடைபெற்றது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த முத்தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட தோழர்கள் வரவேற்பு அளித்தனர்.

மதிய உணவுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாநில பொறுப்பாளர் ஆ.விடுதலைச் செல்வன் ஏற்பாடு செய்தார். இரா. உமாபதி, விரட்டுக் கலைக் குழு ஆனந்த், விழுப்புரம் அய்யனார் ஆகியோருக்கு ஆ. விடுதலைச் செல்வன் சால்வை அணிவித்தார். பிற்பகல் 3.30 மணியளவில் மரக்காணம் அம்பேத்கர் சிலை அருகிலும், மாலை 5 மணியளவில் திண்டிவனம் மார்க்கெட் அருகிலும் பிரச்சாரம் நடைபெற்றது. இரவு தங்குவதற்கு பேராசிரியர் கல்வி மணி, முருகப்பன் ஏற்பாடு செய்தனர். இரவு மற்றும் மறுநாள் காலை உணவு தமு.மு.க. மாவட்ட துணைச் செயலாளர் அலாவுதின் ஏற்பாடு செய்தார். மனித நேய மக்கள் கட்சியைச் சார்ந்த தோழர்கள் பிரச்சாரக் குழுவினருக்கு வாழ்த்து தெரிவித்தனர். இருளர் பழங்குடியினர் அமைப்பின் சார்பில் பேராசிரியர் கல்விமணி ரூ1000 நன்கொடை வழங்கினார்.

**மயிலம்**

9.8.2017 அன்று காலை 10 மணியளவில் மயிலம் பேருந்து நிறுத்தம் அருகிலும், பகல் 12 மணியளவில் விக்கிரவாண்டி பேருந்துநிலையம் அருகிலும் நடைபெற்றது. மதிய உணவு மனித நேய மக்கள் கட்சியைச் சார்ந்த விக்கிரவாண்டி நகர செயலாளர் டி. சாதிக் பாஷா, சலாம் பாஷா ஏற்பாடுசெய்தனர். மாலை 4 மணியளவில் கண்டமங்கலத்திலும், 6 மணியளவில் அரசூர் நான்கு முனை சாலையிலும் பரப்புரை நடைபெற்றது. மயிலம் கண்ட மங்களத்தில் இளையரசன் உரை நிகழ்த்தினார். அரசூரில் த.பெ.தி.க.வை சார்ந்த பாபு, பிரதீப் ஆகியோர் தேநீருக்கு ஏற்பாடு செய்தனர். இரவு மாட்டுக்கறி உணவு, பொய்கை அரசூரைச் சார்ந்த ஸ்டாலின் ஏற்பாடு செய்தார். இரவு தங்குவதற்கு திருமண மண்டபம் இராயப்பேட்டை முருகேசன் ஏற்பாடு செய்தார். ஒரு நாள் நிகழ்வில் விழுப்புரம் மேற்கு மாவட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**சங்கராபுரம்**

10.8.2017 அன்று காலை 10 மணியளவில் திருவெண்ணெய் நல்லூர் மார்க்கெட் அருகிலும்,12 மணியளவில் திருக்கோவிலூர் காந்தி சிலை அருகிலும் பரப்புரை நடைபெற்றது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அம்பேத்வாசன், தோழர்களுக்கு தேநீர் வழங்கினார். மதிய உணவு கிருஷ்ண குமார் ஏற்பாடு செய்தார்.

மாலை 4 மணியளவில் பகண்டை கூட்ரோட்டில் பரப்புரை நடைபெற்றது. இங்கு இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தைச் சார்ந்த பூமாலை தோழர்களுக்கு வாழ்த்து தெரிவித்து தேநீர் வழங்கினார். மாலை 6 மணியளவில் சங்கராபுரம் அண்ணாசிலை அருகில் பரப்புரை நடைபெற்றது. இதில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த திராவிடச் சந்திரன். விவசாயிகள் விடுதலை முன்னணியைச் சார்ந்த தோழர்கள் பங்கேற்றனர். இரவு உணவு, தங்குவதற்கு இடம், மறுநாள் காலை உணவு ஆகியவற்றை விழுப்புரம் மேற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் ஏற்பாடு செய்தனர்.

11.8.2017 அன்று காலை 10 மணியளவில் மூரார் பாளையத்திலும் 12 மணியளவில் கள்ளக்குறிச்சி அம்பேத்கர் சிலை அருகிலும் பிரச்சாரம் நடைபெற்றது. மதிய உணவுக்கு கல்லை ஆசைத்தம்பி ஏற்பாடு செய்தார். மாலை 4 மணியளவில் சின்னச் சேலம் காமராசர் சிலை அருகிலும் 6.30 மணியளவில் ஆத்தூர் பெரியார், அம்பேத்கர் சிலை அருகிலும் பரப்புரை நடைபெற்றது. கள்ளக்குறிச்சியில் மாவட்டத் தலைவர் மதி உரையாற்றினார். மாவட்டப் பொறுப்பாளர்கள் சி. சாமிதுரை, மு. நாகராஜ், வெற்றிவேல், வினோத் குமார், கார்மேகம் ஆகியோர் பங்கேற்றனர். இரவு உணவு, இரவு தங்குவதற்கு, காலை உணவு ஆத்தூர் மகேந்திரன் ஏற்பாடு செய்தார்.

**மங்களபுரம்**

12.8.2017 காலை 10 மணியளவில் மங்களபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் பரப்புரை நடைபெற்றது. இதில் வழக்கறிஞர் துரை அருண் பங்கேற்று உரை நிகழ்த்தினார். 12 மணியளவில் இராசிபுரம் பேருந்து நிலையம் அருகில் பரப்புரை நடைபெற்றது. கழகத் தோழர் பிடல் சேகுவேரா தோழர்களை வரவேற்றார். வீ. பாலு, நா. சோதிபாசு (மதிமுக), நல்வினைச் செல்வன் (த.ம.க.), நீலவானத்து நிலவன் (வி.சி.க.), மணிமாறன் (சி.பி.ஐ.), ராசா முகமது (ம.நே.ம.க.), தட்சணாமூர்த்தி (த.தே.மு.), சுப. கார்த்திகேயன் (த.ம.ம.க.), ஆ. இளங்கோவன், கிஷோர்குமார், மகேந்திரன், பூபதி உள்ளிட்ட பல்வேறு அமைப்பைச் சார்ந்த தோழர்கள் பங்கேற்றனர். மூன்று நாள் நிகழ்வுகளில் விழுப்புரம் மேற்கு மாவட்டச் செயலாளர் க.இராமர் பங்கேற்று உரை நிகழ்த்தினார்.

ஏழு நாள் பரப்புரைப் பயணத்திலும் சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். விழுப்புரம் ந. அய்யனார் உரை நிகழ்த்தினார். விரட்டுக் கலைக் குழுவைச் சார்ந்த ஆனந்த், ரத்னா, குபேந்திரன், போதும் பொண்ணு, கார்மேகம் ஆகியோர் பாடல், வீதி நாடகம் மூலம் மக்களிடையே பரப்புரை செய்தனர். கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், இரண்டு நாள் பரப்புரையில் பங்கேற்றார். மயிலை சுகுமார் ஒலி பெருக்கி ஏற்பாட்டைச் சிறப்பாக அமைத்து தந்தார். இயக்க வெளியீடுகளை மயிலாடுதுறை யுவராஜ் மிகச் சிறப்பாக விற்பனை செய்து வந்தார். நூலின் செய்திகளை மக்களிடையே எடுத்துச்சொல்லி ரூ.10000-க்கு புத்தகங்களை விற்பனைசெய்தார் கழகத் தோழர் அருண். பரப்புரை வாகனத்தை ஓட்டி வந்ததோடல்லாமல், கடை வசூல், மக்களிடையே துண்டறிக்கையை வழங்கி வந்தார் ராஜேஷ். தனி நபரிடம் துண்டறிக்கை கொடுத்து உண்டியல் ஏந்தி வசூல் செய்தார்.

தோழர்கள் தி. இராவணன், நா.விவேக், மு. தமிழ், முழக்கம் உமாபதி, த. குமரன், மு. முரளி ஆகியோர் ஏழு நாட்களும் பரப்புரையில் பங்கேற்று கடை கடையாகச் சென்று சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் துண்டறிக்கை கொடுத்து கடை வசூல் செய்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

தோழர்கள் யேசுகுமார், ப. முனுசாமி, இரா. செந்தில் குமார், மா.தேன்ராஜ், செந்தில் உள்பட, அந்தந்தப் பகுதியைச் சார்ந்த தோழர்களும் பரப்புரையில் பங்கேற்று களப்பணியாற்றினர். தபசி குமரன், பிரகாஷ், மோகன், ஜேம்ஸ் ஆகியோர் இரண்டு நாள் பயணத்தில் பங்கேற்றனர்.

**செய்தி தொகுப்பு : அய்யனார்**

## உண்டியலில் மக்கள் அளித்த தொகை ரூ.53 ஆயிரம்

பரப்புரை நோக்கத்தை விளக்கி விரட்டுக் கலைக் குழுவினரின் வீதி நாடகம் மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக மத்திய அரசு கொண்டு வந்துள்ள நீட் தேர்வால் மருத்துவப் படிப்புக்கு சேர விரும்பும் ஏழை எளிய கிராமப்புற மாணவர்கள் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை எடுத்துரைக்கும்போது பல பேர் கண்கலங்கி நின்றனர். மத்திய அரசின் திட்டங்களால் பாதிக்கப்படாத மக்களே இல்லை என்பதை உணர முடிந்தது.

ஏழு நாள் பயணத்தில் இரவு தங்குவதற்கு உணவு ஏற்பாடு ஆகியவற்றை கழக ஆதரவாளர்களே செய்து வந்தனர். பரப்புரையைப் பார்த்தவர்கள் இன்னும் இது போன்ற பரப்புரையை பிற பகுதியிலும் நடத்துங்கள் என்ற வேண்டுகோளை வைத்தனர். பெரியார் இயக்கத்தில் இன்னமும் இவ்வளவு இளைஞர்களா என்று வியந்தனர். துண்டறிக்கை கொடுப்பது, கடை வசூல், கருத்துரை என கழகத் தோழர்கள் செயல்பாட்டை பலரும் பாராட்டினர்.

ஏழு நாள் பரப்புரையில் உண்டியல் மூலம் கடை வசூல் மட்டும் ரூ.53,000/-. தோழர்கள் திரட்டினர். வழக்கம் போல் சிறு வியாபாரிகளும், சாலையோரத்தில் கடை வைத்துள்ளவர்களும் அதிகளவில் ஆதரவு தந்தனர். 17000 துண்டறிக்கை மக்களிடையே வழங்கப்பட்டது. துண்டறிக்கையை படித்துவிட்டு தொலைபேசி மூலம் பலரும் பாராட்டி ஆதரவு தெரிவித்தனர். பரப்புரை வாகனத்தில் இடம் பெற்றுள்ள வாசகங்கள் படங்கள் மக்களிடையே வரவேற்பு பெற்றது. ஏழு நாட்களில் 26 இடங்களில் பரப்புரையை முடித்துக் கொண்டு ஆகஸ்ட் 12ஆம் தேதி மாலை 5 மணியளவில் திருச்செங்கோடு நிறைவு மாநாட்டில் பயணக் குழு பங்கேற்றது.

## ஈரோடு, திருப்பூரில் இணைய தள செயல்பாட்டாளர்கள் கலந்துரையாடல்

திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு மாவட்டத்தின் சார்பாக இணையதள கலந்துரையாடல் கூட்டம் திராவிடர் விடுதலைக் கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி ஒருங்கிணைப்பில் ஆக.20 அன்று சூரம்பட்டி வலசுவில் பெரியார் ஜேசிபி பணிமனையில் நடைபெற்றது. இரத்தினசாமி அறிமுக உரை நிகழ்த்தினார்.

முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன், தற்போதைய சூழலில் பெரியாரியல்வாதிகள் இணையதளத்தில் எவ்வாறு இயங்கவேண்டும் என்றும் மதவாத சக்திகளுக்கு எதிராக இளைஞர்களை ஒருங்கிணைப்பது பற்றியும் எடுத்துக் கூறினார். முகநூலில் கழகத் தோழர்கள் எப்படி தத்தம் கருத்துகளை சிறப்புற எடுத்துக்கூற வேண்டும் என்பதையும் விளக்கினார்.

கழக இணையதள பொறுப்பாளர் விஜய்குமார், கணினி மற்றும் கைபேசியில் தமிழ் உள்ளீடு முறைகளை குறித்தும் கழக இணையதளம் செயல்படும் விதம் குறித்தும் விளக்கினார். தொடர்ந்து திருச்செங்கோடு பூபதி மீம்ஸ் பதிவிடுதல் குறித்து விளக்கினார். 20க்கும் மேற்பட்ட தோழர்கள் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர். மாலை 5 மணிக்கு நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் தோழர் வைரவேல் நன்றியுரையோடு நிகழ்ச்சி முடிந்தது.

ஈரோட்டை தொடர்ந்து 27.08.2017 அன்று திருப்பூரில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் இணையதள பயன்பாட்டாளர்கள் கலந்துரையாடல் மற்றும் பயிற்சி முகாம் மாநில பொருளாளர் துரைசாமி இல்லத்தில் முகில்ராசு தலைமையில் நடந்தது

நிகழ்வில், தமிழில் கைப்பேசி, கணினி மூலம் எழுதும் முறையையும் கழக இணையதளத்தைப் பற்றியும் விஜய்குமார் எடுத்துரைத்தார். பரிமளராசன் முகநூல் வாட்ஸ் ஆப் அய்யங்கள் எளிமையாக பயன்படுத்தும் முறை குறித்து விளக்கினார். திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த 10 தோழர்கள் கலந்து கொண்டார்கள்

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மாலை நேரத்தில் சுயமரியாதை திருமணங்களை மட்டுமே நடத்தும் தஞ்சை கிராம மக்கள்

தஞ்சை மாவட்டத்தில் பல கிராமங்களில் பெரியார் இயக்கம் உருவாக்கிய பண்பாட்டுப் புரட்சி - வாழ்க்கை நெறியாகியிருப்பதைக் காண முடிகிறது. புரோகிதர் இல்லாத சுயமரியாதை திருமணங்களை மாலை நேரத்தில் நடத்துவது பல கிராமங்களில் வழக்கமாக மாறியிருக்கிறது. இப்பகுதியில் வாழ்ந்த, வாழும் பெரியார் தொண்டர்கள் இதை வாழ்க்கை நடைமுறையாக மாற்றியிருக்கிறார்கள். இது குறித்து ‘தமிழ் இந்து’ நாளேடு (ஜூலை 19) வெளியிட்டுள்ள செய்திக் கட்டுரை.

ஆயக்காரன்புலம், கருப்பம்புலம், பஞ்சநதிக்குளம், வாய்மேடு, தகட்டூர் உள்ளிட்ட கிராமங்களில் நடக்கும் 99 சதவிகித திருமணங்களுக்கு மாலை 6 மணி முதல் 7.30-க்குள் தான் நேரம் குறிக்கிறார்கள். நாம் போயிருந்த போதும் ஆயக்காரன்புலம் காசி வீரம்மாள் திருமண மண்டபத்தில் தனது அண்ணன் மகளின் (மாலை நேர) திருமணத்துக்கு அட்வான்ஸ் கொடுத்துக் கொண்டிருந்தார் பஞ்சநதிக்குளம் கிழக்கைச் சேர்ந்த சி.ஆர்.வெங்கட். “காலையில் திருமணம் செய்யுறது தானே உலக வழக்கம், நீங்க மட்டும் ஏன் உல்டாவா மாலையில் திருமணம் செய்கிறீர்கள்?” என்று அவரிடம் கேட்டோம்.

நமது கேள்வியை மெல்லிய சிரிப்புடன் எதிர்க்கொண்ட வெங்கட், “பெரும்பாலும் திருமண வீட்டார் அவர்களது வசதிப்படிதான் தேதி, நேரம் குறித்து திருமணங்களை நடத்துகிறார்கள். ஆனால், நாங்கள் அப்படி இல்லை. அழைக்கப்படும் அனைவரும் வந்து வாழ்த்த வேண்டும் என்பதற்காக, திருமணங்களை மாலையில் நடத்துகிறோம். ஆயிரம் பத்திரிகை வைச்சோம்னா, ரெண்டாயிரம் பேராச்சும் வருவாங்க. அப்படி எல்லாரும் சேர்ந்துவந்து வாழ்த்தினாத்தானே நல்லது.

இதுமட்டுமில்லைங்க, மாலை நேர திருமணங்கள்ல சாப்பாட்டுச் செலவும் பாதியாக் குறைஞ்சிடும். காலைல கல்யாணம்னா முதல் நாள் ராத்திரி, கல்யாணத்தன்னிக்கு காலை டிபன், மதியச் சாப்பாடுன்னு மூணு வேளைக்குச் சாப்பாடு போடணும். சாப்பாடு பெரிய விஷயமில்லைன்னாலும் இப்படிச் சமைக்கிறதால நிறைய வீணாவும் போகுது. ஒரு வேளை விருந்துங்கிறதால திட்டத்தோட செய்யலாம்; வெரைட்டியாவும் செய்யலாம். மளிகைச் சாமான் பட்ஜெட்டும் கணிசமா குறையுது. சமையல்காரருக்கு பாதிச் சம்பளம் தான், கல்யாண மண்டபத்து வாடகையும் மூணுல ஒரு பங்காகிருது. இப்படிப் பல நல்ல விஷயங்கள் இருக்கதாலதான் எங்க பக்கம் எல்லாருமே இரவுத் திருமணங்களை நடத்துறோம்” என்று சொன்னார்.

அதுசரி, மாலை நேரத்தில் திருமணம் நடத்தும் வழக்கம் எப்படி வந்தது? இதற்கு பதில் சொன்னார் ஆயக்காரன்புலம் விவசாயி பாலு. “இருபது வருசத்துக்கு முந்தி, நாங்களும் காலையிலதான் திருமணங்களை நடத்திட்டு இருந்தோம். இந்தப் பகுதி முழுக்க பூ விவசாயம் அதிகம். பூக்கும் பூக்களை அதிகாலை 4 மணியிலேர்ந்து 8 மணிக்குள்ள எடுத்தாத்தான் ஆச்சு; இல்லைன்னா அது வேஸ்டாயிடும். அதனால, பெரும்பாலான விவசாயக் குடும்பங்கள்ல ஆணும் பொண்ணுமா சேர்ந்து காலை நேரத்துல பூக் கொல்லையிலதான் பாடுபடுவாங்க. பூக்களைப் பறிச்சு கடைகளுக்கோ மண்டிக்கோ கொண்டுபோய் நேரத்துக்குச் சேர்த்தாகணும். இப்படியொரு கட்டாயம் இருக்கிறப்ப, காலையில கல்யாணம் வெச்சா எப்படிப் போய்க் கலந்துக்க முடியும்? இதுபத்தி முக்கியமான சிலபேரு கூடிப் பேசி மாலை நேரத்துல திருமணங்களை நடத்தலாம்னு முடிவெடுத்தாங்க. ஒன்றிரண்டு பேர் அப்படி நடத்த ஆரம்பிச்சதும் பிற்பாடு அதுவே வழக்கமாகிருச்சு” என்கிறார் பாலு.

மாலை நேர திருமணம் ஒரு அறிவுப் புரட்சி என்றால் சத்தமில்லாமல் இன்னொரு காரியத்தையும் இந்தப் பகுதி மக்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கு நடக்கும் திருமணங்கள் அனைத்துமே சீர்திருத்தத் திருமணங்களே. பி.வி.ராஜேந்திரன், மா.மீனாட்சிசுந்தரம், ஓ.எஸ்.மணியன், எஸ்.கே.வேதரத்தினம், பழனியப்பன் என தங்களுக்கு வேண்டிய உள்ளூர் வி.ஐ.பி-க்களை அழைத்துவந்து, அவர்கள் கையால் தாலி எடுத்துக் கொடுக்க வைத்து திருமணத்தை நிறைவு செய்கிறார்கள். பிரபலங்கள் யாரும் வராவிட்டால், அங்கிருக்கும் பெரியவர் ஒருவர் தாலி எடுத்துக் கொடுக்க இனிதே திருமண வைபவம் நிகழ்ந்தேறுகிறது.

சடங்கு, சம்பிரதாயங்கள் மனிதனுக்காக மனிதனால் உருவாக்கப் பட்டவையே. இதை உணர்ந்து, தங்கள் வாழ்க்கை முறைக்கும் காலத்துக்கும் தக்கபடி தங்களை மாற்றிக்கொண்ட இந்த மக்கள் பாராட்டத்தக்கவர்களே!

வாழ்க்கையைத் தொடங்குவதில் வழக்கத்தை மாற்றிய இந்த மக்கள், வாழ்க்கையின் முடிவையும் மற்றவருக்குப் பயனுள்ள வகையில் மாற்றியிருக்கிறார்கள். இந்தப் பகுதியில் கண் தான ஆர்வலர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் வீடுகளில் யாராவது இறந்துவிட்டால் முதலில் தகவல் கொடுப்பது கண் தானம் சம்பந்தப்பட்ட அமைப்புக்குத் தான். நகரத்துவாசிகள்கூட கண்தானம் செய்யத் தயங்கும் நிலையில், கடந்த மூன்றாண்டுகளில் ஆயக்காரன்புலம் கிராமத்திலிருந்து 1,400 ஜோடி கண்கள் தானமாக தரப்பட்டுள்ளன - என்று செய்தி வெளியிட்டுள்ளது ‘தமிழ் இந்து’.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

உங்களை நீங்களே கேட்டுப் பாருங்கள். உங்கள் மனைவியை விடுங்கள், உங்கள் மகளை அப்படியொரு விடுதலைப் பெண்ணாக வளர்த்தெடுக்கிறீர்களா? அப்படி இருப்பீர்கள் என நம்புகிறேன். ஒரு வேளை சிலர் அப்படி இல்லையென்றால் உங்கள் நேசத்துக்குரிய தலைவரின் பிறந்த நாளின் பொருட்டு உங்கள் மகளை சுதந்திர மனுசியாய் வளர்த்தெடுப்பேன் என உறுதியெடுத்துக் கொள்ள பணிவோடு வேண்டுகிறேன்.

**சாதி வெறிபிடித்த என் பெற்றோர் என்னை வளர்த்த விதத்திற்கும் சாதி ஒழிப்பிற்கு நிற்கும் உங்கள் மகளை நீங்கள் வளர்க்கும் விதத்திற்கும் வேறுபாடு இருக்க வேண்டாமா என உங்களிடம் உரிமையோடு கேட்க விரும்புகிறேன். அப்படி வளர்க்கத் தவறினால் நம்மை அறியாமல் சாதிக்குப் பாதுகாப்பு அரணாக நாம் இருந்துவிடுவோம் என்றே அஞ்சுகிறேன்.**

நான் இப்போது இந்தக் கூட்டத்திற்கு வந்திருக்கிறேன். கூட்டம் முடிந்து நான் வீடு போய்ச் சேர இரவு 12 மணி ஆகலாம். அப்படி நான் போனால் இந்த சமூகம் என்னை என்ன சொல்லும்? இப்படி நான் சில இடங்களில் பேச வேண்டுமானால் புத்தகங்கள் படிப்பதில் அதிக நேரம் செலவிட வேண்டும். மணிக்கணக்காக உட்கார்ந்து எழுத்துப் பணி செய்ய வேண்டியிருக்கும். தனிமையில் நிறைய சிந்திக்க வேண்டியிருக்கும். வீடு கூட்டி சுத்தமாய் வைத்திருப்பதற்கோ, கணவனின் தேவையைப் பார்த்துப் பார்த்து நிறைவு செய்வதற்கோ, அதிகாலையில் எழுந்து சமைப்பதற்கோ என் இந்த வாழ்நிலை அதுதரும் மனநிலை இடம்தராது என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம். இவையெல்லாம் பெண் வேலை என்ற கற்பிதத்தை முறியடிக்க முன்வந்து வழிவிட்டால்தானே அவளால் சாதி ஒழிப்பிற்குப் பங்களிக்க முடியும். இதுவே இன்னொரு கோணத்தில் ஒரு ஆண் இதே பணிகளைச் செய்து கொண்டிருக்கும் போது ஒரு பெண்ணிடம் எதிர்பார்க்கும் இதே பணிகளை அந்த ஆணிடம் இந்தச் சமூகம் ஏன் வலியுறுத்தமாட்டேன் என்கிறது?

ஆக மொத்தத்தில் பெண்ணை அவள் இயல்பில் உரிமையோடும் விடுதலையோடும் வாழச் செய்வதுதான் சாதி ஒழிப்புச் செயல்வழிக்கான முதல்படி!

பெண்ணிற்குக் குழந்தைத் திருமணம் செய்து வைத்தது, பெண்ணை உடன்கட்டை ஏறச் செய்வது, பெண் கணவனை இழந்தால் முடங்கச் செய்வது, பெண்ணின் காதல் உரிமையை அடியோடு மறுப்பது... பெண்ணை மையப்படுத்துகிற இவை எல்லாமே சாதியைக் காப்பாற்றுவதற்காகத்தான். இதில் காதல் கவுரவக் கொலை வரை செல்லக் காரணம் பெண் சாதிவிட்டு மணமுடித்து விட்டால் அவள் வயிற்றில் கீழ்சாதிக்காரனின் குழந்தையை சுமந்து பெற்று விடுவாள். இதை அவர்களால் நினைத்துக் கூட பார்க்க முடியாது. தன் சாதிக்கான அடுத்தத் தலைமுறை உருவாகாமல் போய் தன் சாதி தழைத்தோங்க முடியாமல் போய்விடும். குழந்தை பெற்றுத் தரும் கருவி கைமாறுவதுதான் பெண்ணைக் கொலை செய்யக் காரணம். எங்காவது ஒரு ஆண் கவுரவக் கொலைக்கு ஆளாகியிருக்கிறானா? அதனால்தான் சொல்கிறேன் சாதி ஒழிப்பே மக்கள் விடுதலை என்பதோடு கூடுதலாக பெண் விடுதலையே சாதி ஒழிப்பு!“ என்றார் கவுசல்யா.

## விஜயபாரதி – சங்கீதா இணை ஏற்பு நிகழ்வு



20-8-2017 காலை 11-00 மணியளவில் சிவ.விஜய பாரதி - பேரா. சங்கீதா. ஆகியோரின் இணையேற்பு விழா வாழ்த்தரங்கம் கோவை ‘நிமிர்வு’ கலைக் குழுவினரின் பறை முழக்கத்தோடு தொடங்கியது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை யேற்றார். விடுதலை தமிழ்ப்புலிகள் கட்சித் தலைவர் குடந்தை அரசன், தமிழ்ப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் கு.சின்னப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழர் நலன் பேரியக்கம் தலைவர் இயக்குநர் மு.களஞ்சியம், நீலப் புலிகள் இயக்கத் தலைவர் பேரா.புரட்சிமணி, தோழர் ராஜாங்கம், கோவை மாநகரக் கழகத் தலைவர் நேருதாஸ் , சந்திரசேகரன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

## கடற்கரையில் நடந்த கழகத் தோழர்கள் சந்திப்பு



திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்ட திருவான்மியூர் பகுதி கலந்துரையாடல் கூட்டம் நா.விவேக் (தென் சென்னை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்) தலைமையில் 20.08.2017 மாலை பெசன்ட் நகர் கடற்கரையில் நடைபெற்றது. கழகத்தில் புதிதாக இணைத்துக் கொள்ள முன் வந்த இளைஞர்களுக்கு இயக்கக் கொள்கை, நடைமுறைகள் குறித்து விளக்கிட பெசன்ட் நகர் கடற்கரையில் இந்த சந்திப்பை தோழர்கள் ஏற்பாடு செய்தனர். முதல் முறையாக திருவான்மியூர் பகுதியில் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்திற்கு பகுதி சார்ந்த தோழர்கள் ஆர்வமுடன் வந்திருந்தனர். இதில் இரா.உமாபதி (சென்னை மாவட்ட செயலாளர்) மற்றும் அய்யனார் (தலைமைக் குழு உறுப்பினர்) தோழர்களிடம் பெரியாரிய கொள்கைகளை எடுத்துரைத்து தோழர்களின் கேள்விகளுக்கும் தெளிவான விளக்கமளித்தனர். செயற்பாடுகள், களப்பணிகள் போன்றவைகளை குறித்தும் கலந்துரையாடினார்கள்.

## பிறந்த நாள் அன்பளிப்பு

தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி ஓய்வு பெற்ற பேராசிரியர் இரா. சண்முகசுந்தரம் - பேராசிரியர் ருக்மணி ஆகியோர் மகன் ச. இராமலிங்கம் வால்டர்ஸ் - நி. சியாமணி இணையரின் மகன்கள் கவின் 18.6.2017 அன்று 5ஆவது பிறந்த நாளும், நவின் 6.3.2017 அன்று முதல் பிறந்த நாளும் ஆஸ்திரேலியா சிட்னியில் வைத்து கொண்டாடினர். பேரன்கள் பிறந்த நாள் மகிழ்வாக பேராசிரியர் சண்முக சுந்தரம் - பேரா. ருக்மணி ஆகியோர் திராவிடர் விடுதலைக் கழக வளர்ச்சி நிதியாக ரூ.2500/- கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரனிடம் வழங்கினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 31st August 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN